**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 25.08.2025**

**O.S. 206/2022**

**வா.சா.1 – சொரிமுத்து**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

பட்டிகை சொத்து சம்மந்தமாக எனக்கு பட்டாவோ கரத்தீர்வையோ கிடையாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 மற்றும் 2 எனது தாயார் தாக்கல் செய்த வழக்கில் தள்ளுபடி செய்யப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என்றால் சரிதான். தீர்மானம் போட்டு கொடுக்கப்பட்ட 50 சென்ட்டும் என் கைவசம்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 50 சென்டுக்கும் வழக்கு பட்டிகை சொத்திற்கும் வேறு வேறு சர்வே எண் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் ரேகா இருக்கிறாரா என்றால் நான் துவரங்காட்டில் இருக்கிறேன் வீட்டை பூட்டி போட்டிருக்கிறேன். நான் வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ துவரங்காட்டில் இருக்கிறேன் என்றோ வீட்டை பூட்டி போட்டிருக்கிறேன் என்றோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் சாவி என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சாவியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் பிரதிவாதிகள் பூட்டிவைத்து அவர்கள் கையில் சாவி உள்ளது. பிரதிவாதிகள் கையில் சாவி இருப்பதால் வழக்கு பட்டிகை வீடு எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல நான் தொழிலுக்காக துவரங்காட்டில் இருந்தபோது பிரதிவாதிகள் காவல்துறையில் புகார் கொடுத்து வீட்டினை பூட்டி வைத்துள்ளார்கள்.

நான் தொழிலுக்காக துவரங்காட்டில் இருந்தபோது பிரதிவாதிகள் காவல்துறையில் புகார் கொடுத்து வீட்டினை பூட்டி வைத்துள்ளதாக வழக்குரையிலோ பிரமாண

வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் பிரதிவாதிகள் பூட்டி எடுத்ததாக சொல்லப்படும் வீட்டை திருப்பி கொடுப்பதற்கு வேண்டி பரிகாரம் கேட்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது வழக்குரையை பார்த்தால் தெரியும். வா.சா.ஆ.3 மனுவில் பெயர் மாற்றம் செய்து தருமாறு கொடுத்த மனுவிற்கு சொத்து 1ம் பிரதிவாதி அறக்கட்டளைக்கு உரிமைப்பட்டது அதற்குள்ளான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்பட்டு பெயர்மாற்றம் செய்து தரப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிபி என்பவர் எனது மருமகள் என்றால் சரிதான். சிபி கொடுத்த வா.சா.ஆ.4 மனுவில் வீட்டு எண். 12/61ல் குடியிருந்து வந்தோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது பழைய நம்பர். வா.சா.ஆ.4 13.09.2023 அன்று மனு கொடுக்கப்பட்டது இந்த வழக்கிற்கு பின்பாக என்றால் சரிதான். வா.சா.ஆ.4 மனு என்னால் கொடுக்கப்பட்டதல்ல என்னுடைய மருமகள் பாதிக்கப்பட்டவர் என்பதால் பிரதிவாதிகள் அத்துமீறி வீட்டை ஆக்கிரமித்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

சிபி மேற்படி வீட்டில் குடியிருந்ததாக காட்டுவதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 புகார் கொடுத்ததாக காட்டுவதற்கு வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 வழக்கிற்காக எனது மருமகளை வைத்து தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**